සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** தொடர்பாடுநரிடமிருந்து பெறுநருக்குத் தகவலை எடுத்துச்செல்லும் தொடர்பாடல் கட்டமைப்புக்கூறு எது?
(1) அனுபவக்களம் (2) செய்தி (3) பின்னூட்டம்
(4) வழிமுறை (5) சூழல்

**2.** வெகுசனத் தொடர்பாடலில் பொதுவாக இடம்பெறுவது
(1) வட்டவடிவத் தொடர்பாடலாகும். (2) ஒருவழித் தொடர்பாடலாகும்.
(3) இருவழித் தொடர்பாடலாகும். (4) தனிப்பட்ட தொடர்பாடலாகும்.
(5) நேர்மறைத் தொடர்பாடலாகும்.

**3.** தகவல் பெறும் உரிமையை முதன்முதலில் சட்டரீதியாக்கிய நாடு எது?
(1) சுவீடன் (2) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (3) பிரான்ஸ்
(4) இந்தியா (5) ஜேர்மனி

**4.** செவிமடுத்தல், பேசுதல், போலச்செய்தல், உச்சரிப்பு ஆகியன நேரடியாகத் தொடர்புபடுவது,
(1) எழுத்துத் தொடர்பாடலுடன் ஆகும்.
(2) வாய்மொழித் தொடர்பாடலுடன் ஆகும்.
(3) பேச்சுத் தொடர்பாடலுடன் ஆகும்.
(4) முறைசார் தொடர்பாடலுடன் ஆகும்.
(5) செவிப்புலத் தொடர்பாடலுடன் ஆகும்.

**5.** மனித குலத்தில் தொட்டுணரமுடியாத பண்பாட்டு மரபுரிமையாக யுனெஸ்கோவினால் முதன்முதலில் அடையாளப்படுத்தப்பட்ட உள்ளூர்க் கலை வடிவம் எது?
(1) கோலம் (2) சொக்கரி (3) பொம்மலாட்டம்
(4) நாடகம் (5) சடங்குகள்

**6.** தொடர்பாடல் மானுட உறவுகளை விருத்தி செய்கின்றது, அது குறிப்பிட்டதொரு தேசத்திற்காக வரையறை செய்யப்படுவதல்ல என்பதுடன் காலத்தையும் கடந்து நிற்பது. இச்சிந்தனை வெளிப்படுத்தப்பட்டது
(1) சார்ள்ஸ் கூலியினால் ஆகும்.
(2) வில்பர் ஷ்ராமினால் ஆகும்.
(3) ஷனொன் மற்றும் வீவரினால் ஆகும்.
(4) சார்ள்ஸ் ஒஸ்கூட்டினால் ஆகும்.
(5) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லினால் ஆகும்.

**7.** எழுத்தாளரின் அபிப்பிராயத்தையும் அடையாளத்தையும் எடுத்துக்காட்டும் வகையிலாக செய்திப்பத்திரிகையொன்றின் அங்கமாக அமைவது எது?
(1) செய்தி (2) சித்திரிப்புக் கட்டுரைகள் (3) பத்தி எழுத்துக்கள்
(4) விளம்பர எழுத்துரு (5) நேர்காணல்கள்

[பக். 2 ஐப் பார்க்க

**8.** செய்திப்பத்திரிகையொன்று அறநெறிகளை மீறும்போது, பாதிக்கப்பட்ட தரப்பு எந்த நிறுவனத்திடமிருந்து தமது குறைகளுக்கான நீதியைக் கோர முடியும்?
(1) இலங்கைப் பத்திரிகைப் பேரவை
(2) அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்
(3) அரசாங்கத் தகவல் திணைக்களம்
(4) இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம்
(5) வெகுசன ஊடக அமைச்சு

**9.** மானுடர்களின் நடத்தைகளும் உளப்போக்குகளும் மிகவும் தொடர்புடையனவாக அமைவது,
(1) குழுத் தொடர்பாடலுடன் ஆகும்.
(2) பண்பாட்டிடைத் தொடர்பாடலுடன் ஆகும்.
(3) வாய்மொழியற்ற தொடர்பாடலுடன் ஆகும்.
(4) ஆளிடைத் தொடர்பாடலுடன் ஆகும்.
(5) முறைசாராத் தொடர்பாடலுடன் ஆகும்.

**10.** 'கோலம்' நிகழ்த்துகையின் வழக்காறுகள் அதிகம் சுட்டிநிற்பவை,
(1) நாட்டார் பாரம்பரியத்தை ஆகும்.
(2) அதன் அமைப்பிலுள்ள எளிமையை ஆகும்.
(3) பண்பாட்டுச் சூழலமைவை ஆகும்.
(4) கருப்பொருள் உள்ளடக்கத்தை ஆகும்.
(5) பாரம்பரியமான பயிற்சிகளை ஆகும்.

**11.** தகவல்களைப் பெறவும், அனுப்பவுமான தகைமையானது எடுத்துக்காட்டுவது,
(1) தொடர்பாடல் பன்முகத்தன்மையானது என்பதையாகும்.
(2) தொடர்பாடல் ஒரு செயன்முறை என்பதையாகும்.
(3) தொடர்பாடல் இருவழித் தன்மையானது என்பதையாகும்.
(4) தொடர்பாடல் பின்னூட்டத்தை உள்வாங்குகின்றது என்பதையாகும்.
(5) தொடர்பாடல் தாக்கங்களை உள்வாங்குகின்றது என்பதையாகும்.

**12.** ஊடகச் செயன்முறையில் இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் வகிபாகம் எது?
(1) வாயிற்காப்பு ஆகும். (2) ஒழுங்காக்குதல் ஆகும்.
(3) ஊடக விஸ்தீரணம் ஆகும். (4) பின்னூட்டம் ஆகும்.
(5) தணிக்கை செய்தல் ஆகும்.

**13.** மொழிசார் தடையென அறியப்படும் பலவீனம் நிகழ்தலானது, பின்வரும் எந்தவொரு சந்தர்ப்பத்துடன் தொடர்புபடுகின்றது?
(1) செய்தியை முன்வைத்தல் (2) குறியீடுகளைத் தெரிவுசெய்தல்
(3) பெறுநரின் வகிபங்கு (4) தொழினுட்பத்தின் பயன்பாடு
(5) செவிமடுத்தற் செயன்முறை

**14.** படைப்பாக்கப் பணியொன்றின் முக்கிய இயல்பு எது?
(1) தொடர் பயிற்சி (2) பல்வகைமை
(3) புத்தாக்கம் / சுயம் (4) நிகழ்த்துகைப் பண்பு
(5) பன்முகத்தன்மை

**15.** ஊடக விமர்சனம் அல்லது திறனாய்வின் மையம்
(1) ஊடகவியலாளர் ஆகும். (2) செய்தி ஆகும்.
(3) பெறுநர் ஆகும். (4) ஊடக விளங்கறிவு ஆகும்.
(5) அனுபவக்களம் ஆகும்.

**16.** பரீட்சையில் சித்தியடைவதற்காகப் பாடவிடயத்தில் கவனம் செலுத்துமாறும், ஊடகங்களில் அதிகநேரம் செலவிட வேண்டாமென்றும் ஆசிரியரொருவர் மாணவர்களை வேண்டிக்கொண்டார். இங்கு, ஊடக விளங்கறிவு தொடர்பில் மாணவர்களுக்கு எடுத்துச்சொல்லப்பட்ட முக்கிய அம்சம்
(1) தனிப்பட்ட அவதானம் ஆகும். (2) அறிவுக் கட்டமைப்பு ஆகும்.
(3) திறன்கள் ஆகும். (4) ஆய்ந்தறிதல் ஆகும்.
(5) மதிப்பீடு ஆகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**17.** செய்திப்பத்திரிகையொன்றின் ஆசிரியரான திரு. இராஜரட்ணம் ஓய்வு பெற்றபோது, அவர் அதே செய்திப் பத்திரிகையின் குறைகேள் அதிகாரியாக (ஒம்புட்ஸ்மென்) நியமிக்கப்பட்டார். அவரது புதிய வகிபாகம்,
(1) முற்தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.
(2) கூட்டுத் தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.
(3) சட்டரீதியான தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.
(4) சுய தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.
(5) நிறுவனரீதியான தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.

**18.** பிரித்தானியா, 1927இல் பிரித்தானிய அனுமதி / சாசனத்தை (Royal Charter) என்ன தேவைக்காக அறிமுகப்படுத்தியது?
(1) இலங்கையில் வானொலி ஒலிபரப்பை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.
(2) இந்தியாவில் வானொலி ஒலிபரப்பை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.
(3) பிரித்தானியாவில் தொலைக்காட்சி ஒளிபரப்பை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.
(4) பொதுமக்கள் சேவை ஊடக எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.
(5) செய்தி ஒழுக்கநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.

**19.** வில்பர் ஷ்ராம் கூறுவதன்படி, வெகுசன ஊடகங்கள் மூன்று வகிபங்குகளைக் கொண்டிருக்கின்றன. அவை எவையாகும்?
(1) பாதுகாவலர், வாயிற்காப்பாளர், கலந்துரையாடல் சபை
(2) கலந்துரையாடல் சபை, ஆசிரியர், விமர்சகர்
(3) விமர்சகர், பாதுகாவலர், வாயிற்காப்பாளர்
(4) வாயிற்காப்பாளர், கலந்துரையாடல் சபை, ஆசிரியர்
(5) ஆசிரியர், பாதுகாவலர், கலந்துரையாடல் சபை

**20.** ஆய்வொன்றில் வினாக்கொத்தைப் பயன்படுத்திப் பெறப்பட்ட தரவுகளாக அமைவன
(1) முதனிலைத் தரவுகள் ஆகும்.
(2) அளவுசார் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகும்.
(3) பண்புசார் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகும்.
(4) இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகும்.
(5) முதனிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகும்.

**21.** பாதுகாப்பு மற்றும் அனர்த்தம் தொடர்பான விடயங்களில் முன்னெச்சரிக்கை விடுக்கப்படுகின்றமை தொடர்புபடுவது,
(1) மேற்பார்வையுடன் ஆகும்.
(2) தூண்டலுடன் ஆகும்.
(3) பொருட்கோடலுடன் ஆகும்.
(4) இணைப்பாக்கம் செய்தலுடன் ஆகும்.
(5) சமூகமயமாக்கலுடன் ஆகும்.

**22.** 'ஹப்' (HUB) மற்றும் ஒஸ்கூட்-ஷ்ராம் தொடர்பாடல் மாதிரிகள் இரண்டிலும் மறைந்திருக்கும் பொதுவிலான அம்சமாக அமைவது எது?
(1) வாயிற்காப்பு (2) ஒழுங்காக்குதல் (3) அனுபவக்களம்
(4) பின்னூட்டம் (5) தாக்கம்

**23.** **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) எழுத்துத் தொடர்பாடல் முறைசார் தொடர்பாடலுக்கு அதிகம் பொருத்தமானது.
(2) பேச்சுத் தொடர்பாடல் அதிகம் நேருக்குநேராக இடம்பெறும்.
(3) வாய்மொழித் தொடர்பாடல் நேரத்தை எடுத்துக்கொள்ளாது.
(4) பேச்சுத் தொடர்பாடல் அதிகம் முறைசாராத் தொடர்பாடலில் பயன்படுத்தப்படும்.
(5) எழுத்து மற்றும் பேச்சுத் தொடர்பாடல்கள் வாய்மொழித் தொடர்பாடலுக்கு உரித்தானவையல்ல.

**24.** திரைப்படமொன்றில், பிரதான கதாபாத்திரம் நீதிமன்றத்தில் வழக்கொன்றை வெற்றிகொண்டதன் பின்னர் வெளியே வரும்போது, அக்கதாபாத்திரத்தின் மேன்மையை வெளிப்படுத்தும் காட்சியொன்றைப் படமாக்குவதாயின், அதற்கு அவசியம் பயன்படுத்தவேண்டிய கமெரா எடுப்பு / பார்வைக் கோணம்
(1) நீள் எடுப்பு (2) அண்மைநிலை எடுப்பு
(3) பதிகோணம் (4) மிக நெடுந்தொலை எடுப்பு
(5) உயர்கோணம்

[பக். 4 ஐப் பார்க்க

**25.** ஊடக விளங்கறிவில் அடிப்படையான தேவை
(1) செய்தியை மதிப்பிடுதல் ஆகும்.
(2) செய்தியைப் பகுப்பாய்வு செய்தல் ஆகும்.
(3) செய்தியைப் பொருட்கோடல் செய்தல் ஆகும்.
(4) செய்தியைத் தொகுப்பாக்குதல் ஆகும்.
(5) செய்தியைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகும்.

**26.** ஊடகக் கற்கைகளில் **ஆகக்குறைந்த** முக்கியத்துவமுடையது எது?
(1) ஊடக விளங்கறிவு
(2) விமர்சனரீதியான ஊடகப் பாவனை
(3) எழுத்தாற்றல்
(4) ஊடகப் பண்பாட்டைப் புரிந்துகொள்ளல்
(5) மொழித் தேர்ச்சி

**27.** புதிதாக நியமிக்கப்பட்ட இந்தியப் பிரதமர் பற்றிய இணையக் கட்டுரையொன்றின் வழியாக, அவர் படித்த பாடசாலை, பல்கலைக்கழகம், குடும்பம் பற்றிய தகவல்களை அறிந்ததோடு அவரது குரலைச் செவிமடுக்கவும், அவர் பற்றிய வீடியோ ஒன்றினைப் பார்வையிடவும் ரவியால் முடிந்தது. இந்தச் செயன்முறை,
(1) மீயுரை என்பதாகும்.
(2) தானியங்கி என்பதாகும்.
(3) எண்ணிமப்படுத்தல் என்பதாகும்.
(4) வலையமைப்பாதல் என்பதாகும்.
(5) இடைத்தொடர்பாக்கம் என்பதாகும்.

**28.** ஆளிடைத் தொடர்பாடலில் இடையூறாகக் கருத்திற்கொள்ளப்படுவதற்கு **ஆகக்குறைந்த** சந்தர்ப்பத்தைக் கொண்டிருப்பது எது?
(1) தலைவலி (2) மகிழ்ச்சி (3) எதிரொலி
(4) தெளிவு (5) பேரச்சம் (horror)

**29.** பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற்கொள்க.
A - இது, தனிப்பட்ட சுதந்திரத்தின் நீட்சியாகும்.
B - அபிப்பிராயங்கள் அவரவர் விருப்பத்திற்கேற்றபடி தன்னியல்பாக வெளிப்படுத்தப்பட முடியும்.
C - ஜனநாயகச் சமூகங்களில் ஊடகம் வழியாகப் பெறுநர்களை நோக்கி முன்வைக்கப்படும் தகவல்களை ஒருவர் ஏற்றுக்கொள்ளவோ அல்லது ஏற்றுக்கொள்ளாது விடவோ முடியும்.
மேற்கூறப்பட்டவற்றில், ஊடக சுதந்திரத்துடன் தொடர்புடைய சரியான கூற்று
(1) A மாத்திரம் ஆகும். (2) A மற்றும் B மாத்திரம் ஆகும்.
(3) A மற்றும் C மாத்திரம் ஆகும். (4) B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(5) C மாத்திரம் ஆகும்.

**30.** ஆய்வொன்றில் தரவுகளைச் சேகரித்த பின்னர், அவசியம் பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகள் வரிசைக்கிரமமாக அமைவது,
(1) பிரச்சினையை அடையாளம் காணுதல், தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், முடிவுகளை எட்டுதல்
(2) தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், முடிவுகளை எட்டுதல், அறிக்கை எழுதுதல்
(3) குறிக்கோள்களை அடையாளம் காணுதல், முடிவுகளை எட்டுதல், அறிக்கை எழுதுதல்
(4) முடிவுகளை எட்டுதல், தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், அறிக்கை எழுதுதல்
(5) கருப்பொருளைத் தீர்மானித்தல், தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், முடிவுகளை எட்டுதல்


**31.** பொதுமக்கள் தொடர்பில் 'எதுவும் மறைக்கப்படக் கூடாது' என்ற எண்ணக்கரு விவரிக்கப்பெற்றது,
(1) செய்தி முகவர் / பரப்புரை மாதிரியில் ஆகும்.
(2) பிரசித்த மாதிரியில் ஆகும்.
(3) பொதுமக்கள் தகவல் மாதிரியில் ஆகும்.
(4) இருவழி சமச்சீரற்ற மாதிரியில் ஆகும்.
(5) இருவழி சமச்சீர் மாதிரியில் ஆகும்.

[பக். 5 ஐப் பார்க்க

- **32** தொடக்கம் **34** வரையான வினாக்கள் கீழே தரப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

அடுத்தமாதம் முதலாவது ஞாயிற்றுக்கிழமையில் இடம்பெறவுள்ள தனது பிறந்தநாளுக்கு ஆஷா (A), பரணி (B) யைத் தொலைபேசி அழைப்பொன்றின் (P) வழியாக வரவேற்றிருந்தார். குறித்த நாளில் தனது உறவினர்களின் வருகை இடம்பெறுவதை ஞாபகப்படுத்திக் கொண்ட பரணி (B), மீள அழைப்பை ஏற்படுத்தி (Q), பிறந்தநாள் வரவேற்பு அழைப்பை பண்புடன் மறுத்திருந்தார்.

இந்தச் செயன்முறை, பின்வரும் வரைபடத்தைப் பயன்படுத்திக் காட்சிப்படுத்தப்பட முடியும்.




**32.** மேற்படி தகவல்களின்பேரில், P மற்றும் Q அடிப்படையில் கொண்டிருப்பவை,
(1) ஒலிகள் ஆகும். (2) வார்த்தைகள் ஆகும். (3) தகவல்கள் ஆகும்.
(4) குறியீடுகள் ஆகும். (5) தரவுகள் ஆகும்.

**33.** இங்கே செயன்முறை **B ⟶ Q ⟶ A** ஆனது சிறப்பாக விபரிக்கப்பட்டது
(1) குறிமுறையாக்கம் எனவாகும். (2) குறிமுறையவிழ்ப்பு எனவாகும்.
(3) ஊடு கடத்துதல் எனவாகும். (4) பின்னூட்டம் எனவாகும்.
(5) பெறுதல் எனவாகும்.

**34.** ஒஸ்கூட்-ஷ்ராம் தொடர்பாடல் மாதிரியின்படி, Bயினுள் இடம்பெற்ற செயன்முறையின் வரிசைக்கிரமம் எது?
(1) குறிமுறையவிழ்ப்பு, பொருட்கோடல், குறிமுறையாக்கம்
(2) குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு, பொருட்கோடல்
(3) பொருட்கோடல், குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு
(4) குறிமுறையாக்கம், பொருட்கோடல், குறிமுறையவிழ்ப்பு
(5) குறிமுறையவிழ்ப்பு, குறிமுறையாக்கம், பொருட்கோடல்

**35.** பொதுமக்கள் தொடர்பு மற்றும் விளம்பரப்படுத்தல் பற்றிய மிகச் சரியான கூற்று எது?
(1) விளம்பரப்படுத்தல் ஒரு முகாமைத்துவ இலக்காகும்.
(2) தூண்டுதல் விளம்பரப்படுத்தலில் மாத்திரம் முக்கியமானதாகும்.
(3) பொதுமக்கள் தொடர்பு ஒரு சந்தைப்படுத்தல் இலக்காகும்.
(4) நல்லெண்ணத்தை விருத்திசெய்வது பொதுமக்கள் தொடர்பு, விளம்பரப்படுத்தல் இரண்டிலும் எதிர்பார்க்கப்படுகின்றது.
(5) விளம்பரப்படுத்தல், பொதுமக்கள் தொடர்பு இரண்டிலும் வெகுசன ஊடகங்கள் பயன்படுத்தப்படும்.

**36.** கணக்கெடுப்பு ஆய்வொன்றை (Survey) மேற்கொள்வது தொடர்பிலான **தவறான** கூற்று எது?
(1) ஒப்பீட்டுரீதியாக இது குறைந்த காலத்தை எடுத்துக் கொள்ளும்.
(2) விபரமான மற்றும் ஆழமான பதில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
(3) ஒப்பீட்டுரீதியில் குறைந்த செலவீனமுடையது.
(4) பெரும் எண்ணிக்கையான கூட்டுப் பதிலளிப்பாளர்கள் பயன்படுத்தப்பட முடியும்.
(5) மென்பொருட்களைப் பயன்படுத்தி தரவுகள் துரிதமாகப் பகுப்பாய்வு செய்யப்பட முடியும்.

**37.** A, B, C, D என்பன தொடர்பாடலுடன் தொடர்புடைய முக்கியமான நாட்கள். அவை, வரிசைக்கிரமம் அல்லாதவாறு 1, 2, 3, 4 ஆகியவற்றைப் பயன்படுத்திப் பெயரிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| A - பெப்ரவரி 13ஆம் திகதி | 1. எழுத்தறிவு தினம் |
| B - மே 3ஆம் திகதி | 2. மனித உரிமைகள் தினம் |
| C - செப்ரெம்பர் 8ஆம் திகதி | 3. உலக வானொலித் தினம் |
| D - டிசெம்பர் 10ஆம் திகதி | 4. உலக ஊடக சுதந்திர தினம் |

மேற்படி திகதிகளுடன் சரியாகப் பொருந்தும் பெயர்களைத் தரும் தெரிவைத் தேர்ந்தெடுக்குக.
(1) A1, B2, C3, D4 (2) A2, B3, C4, D1 (3) A4, B2, C1, D3
(4) A3, B4, C1, D2 (5) A4, B3, C2, D1

**38.** பாடசாலை மாணவர்களை இலக்காகக்கொண்ட, கல்வியுடன் தொடர்புடையதாக இணைய வானொலியொன்றை அறிமுகம் செய்வதன் முக்கியத்துவத்தை ஆசிரியர் வலியுறுத்தினார். இந்த முன்மொழிவுடன் தொடர்புடைய ஊடகப் போக்கு

(1) ஊடகக் குவிவு (2) சிறு கூறுகளாக்குதல் (3) கட்டுப்பாட்டுத் தளர்வு
(4) புத்தாக்கப் பரவலாக்கம் (5) மாணவரை மையப்படுத்துதல்

**39.** கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர், ஐரோப்பா முழுவதும் பரவிய பொதுமக்கள் தொடர்பு எண்ணக்கருவானது,

(1) பொதுமக்களையும் தொழிற்துறைகளையும் இணைக்கும் தோற்றப்பாடாக இருந்தது.
(2) தொழிற்துறைகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவுகளை உறுதிப்படுத்தும் தோற்றப்பாடாக இருந்தது.
(3) விற்பனையை விருத்தி செய்யும் விளம்பர முறையாக இருந்தது.
(4) வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்தும் சந்தைப்படுத்துல் உத்தியாக இருந்தது.
(5) உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயான முரண்பாடுகளை முகாமைப்படுத்தும் செயன்முறையாக இருந்தது.

**40.** பின்வருவன, இலங்கையில் தகவல்பெறும் உரிமைச் சட்டம் பற்றிய விவாதமொன்றில் முன்வைக்கப்பட்ட சிந்தனைகளில் சிலவாகும்.

சீதா - தகவல்களை அணுகுதல் என்பது தகவல்களைத் தடையின்றி பெறும் ஆற்றலை எடுத்துச் சொல்கின்றது.

ரொஷான் - அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையையும் திறந்ததன்மையையும் உறுதிப்படுத்த இந்தச் சட்டம் பொதுமக்களுக்கு அனுசரணையாகவுள்ளது.

ரமேஷ் - உரிய நபரின் எழுத்துமூலச் சம்மதமின்றி அந்நபரின் மருத்துவ அறிக்கையையும் மற்றொரு நபருக்கு வெளிப்படுத்துதல் முடியாது.

புஷ்பிகா - மேன்முறையீட்டுச் செயன்முறையில், தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு முக்கிய வகிபங்கொன்றினை ஆற்றுகின்றது.

மாறன் - விண்ணப்பதாரியுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் தகவல் மாத்திரமே வழங்கப்படும்.

மேற்குறித்தவற்றில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய **பொருத்தமற்ற** சிந்தனை வெளிப்படுத்தப்பட்டது,

(1) மாறனினால் ஆகும். (2) சீதாவினால் ஆகும்.
(3) ரொஷானினால் ஆகும். (4) புஷ்பிகாவினால் ஆகும்.
(5) ரமேஷினால் ஆகும்.

**41.** பின்வரும் கருப்பொருட்களிலும் அவை பற்றிய விபரிப்பிலும் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.

| **கருப்பொருள்** | **விபரிப்பு** |
|---|---|
| 1 - பாரம்பரியப் பண்பாடு | A - ஆழமற்ற, எளிமையான, பெருந்தொகை உற்பத்திப் பொருட்களைக் கொண்டது. |
| 2 - நாட்டார் பண்பாடு | B - இனம்சார்ந்த மற்றும் தேசிய பண்பாடுகளை அடக்குவது. |
| 3 - பிரசித்த பண்பாடு | C - தகவல் பண்பாட்டின் விசேடமான ஒரு வகைப்பாடு |
| 4 - ஊடகப் பண்பாடு | D - செவ்வியல் பண்பாடுகளின் தோற்றத்துக்கான அடிப்படையைத் தருவது. |
| 5 - பூகோளப் பண்பாடு | E - உன்னதமான குறியீட்டுத் தொகுதியின் மீது கட்டியெழுப்பப்படுவது. |

கருப்பொருட்களும் விபரிப்புக்களும் பொருத்தமாகும்போது, சரியான விடையாக அமைவது

(1) 1C, 2D, 3B, 4E, 5A
(2) 1D, 2E, 3C, 4A, 5B
(3) 1D, 2E, 3A, 4B, 5C
(4) 1E, 2D, 3A, 4C, 5B
(5) 1E, 2D, 3C, 4A, 5B

**42.** ஒரு நாட்டின் அபிவிருத்தியானது சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் தங்கியிருப்பதுடன், அச்செயன்முறை அதே நாட்டின் பிரஜைகளால் முன்னெடுக்கப்படுவதாகவும் அமையும்போது,

(1) அது உள்ளூர் மயமாக்கல் ஆகும்.
(2) அது மக்கள் மையம் ஆகும்.
(3) அது வறுமையை ஒழித்தல் ஆகும்.
(4) அது சமூகமயமாதல் ஆகும்.
(5) அது சமூகத் தொடர்புகள் மற்றும் சமத்துவத்தைக் கட்டியெழுப்புதல் ஆகும்.

[பக். 7 ஐப் பார்க்க

**43.** பிரசித்த பண்பாட்டில், எவற்றை வெகுசன ஊடகங்கள் பெரும்பாலும் முன்னிலைப்படுத்துகின்றன?
(1) அழகியல்சார் செய்திகளை ஆகும்.
(2) கல்வி விழுமியங்களுடனான செய்திகளை ஆகும்.
(3) மனிதநேயத்தை முன்னிலைப்படுத்தும் செய்திகளை ஆகும்.
(4) பெறுநர் ஒழுக்கங்களை விருத்திசெய்யும் செய்திகளை ஆகும்.
(5) வணிக ஆதாயங்களை உள்ளடக்கும் செய்திகளை ஆகும்.

**44.** பெறுநரின் வகிபங்கு பற்றிய சரியான கூற்று எது?
(1) பெறுநரின் வகிபங்கு நிலையானது
(2) பெறுநரின் வகிபங்கு எப்போதும் தன்னினைவு அல்லது உணர்வுள்ளது
(3) பெறுநர் தொடர்பாடுநராக முடியாது
(4) பெறுநரின் விளங்கறிவு பல்வகைமையானது
(5) பெறுநரின் அனுபவக்களம் பரந்தது

**45.** பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற்கொள்க.
A - தனிப்பட்ட மற்றும் பொதுசன நடத்தைகளை மாற்றக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமையளித்தல்
B - தொடர்பாடல் மற்றும் சமூகக் கட்டமைப்புடன் இணைந்திருக்கும் உறவுகளை விருத்தி செய்தல்
C - விமர்சனரீதியான கோட்பாடுகள் மூலம் மானுட சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குதல்
D - மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தை வலுப்படுத்துதல்

ஸ்ரீநிவாஸ் மெல்கோட்டேயின் அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய சிந்தனைகளுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கும் கூற்றுக்கள்
(1) A மற்றும் B மாத்திரம் ஆகும்.
(2) A, B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(3) B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(4) B, C மற்றும் D மாத்திரம் ஆகும்.
(5) C மற்றும் D மாத்திரம் ஆகும்.

**46.** ரமணி தனது படைப்பாக்கச் சிந்தனை தொடர்பில் வகுப்பறையில் சில பார்வைகளை முன்வைத்தார்.
A - படைப்பாக்கப் பணியொன்று தனித்து சுய அனுபவத்தில் மாத்திரமே தங்கியிருப்பதாகும்.
B - படைப்பாக்கப் பணியில் கற்பனை பயன்படுகின்றது.
C - திறன், தொடர்பயிற்சி மற்றும் பிறப்பு ஞானம் ஆகியன முக்கியமானவை.
D - புதிய சிந்தனைகளின் பால் நெகிழ்வுடனிருத்தல் பயன்தரக்கூடியது.

மேற்குறித்தவற்றில் சரியான கூற்றுக்கள்,
(1) A, B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(2) A, B மற்றும் D மாத்திரம் ஆகும்.
(3) A மற்றும் C மாத்திரம் ஆகும்.
(4) B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(5) B, C மற்றும் D மாத்திரம் ஆகும்.

**47.** யுனெஸ்கோவின்படி, சமூக இடைவெளியைக் குறைத்துக்கொள்ளவும், ஒரு நாட்டின் அமைதியையும் சம நிலையையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும்
(1) ஊடகத் தொழிற்துறையின் உரிமையாண்மை அவசியம் அரசிடம் வழங்கப்படவேண்டும்.
(2) ஊடகத் தொழில்நுட்பம் விருத்திசெய்யப்பட வேண்டும்.
(3) தொடர்பாடல் கொள்கைகள் அவசியம் முறைப்படுத்தப்பட வேண்டும்.
(4) மனித உரிமைகள் பற்றிய அறிவு அவசியம் முன்னேற்றமடைய வேண்டும்.
(5) ஊடக அறநெறிகள் அவசியம் உருவாக்கப்பட வேண்டும்.

**48.** இலங்கையில் கருத்து மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரம் பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அது பிரஜைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
(2) அது அரசியலமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
(3) அது அவசரகாலச் சட்டத்தினால் தாழ்நிலைப்படுத்தப்படுகின்றது.
(4) அது குறித்த நேரங்களில் ஓர் அடிப்படை உரிமையாகும்.
(5) அது அடுத்தவர்களின் உரிமைகளில் தங்கியிருக்கின்றது.

[பக். 8 ஐப் பார்க்க

**49.** பின்வரும் சந்தர்ப்பங்களைக் கருத்திற்கொள்க.

X - 'A' என்னும் திரைப்படத்தைத் தயாரிப்பதற்காக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட கடன் பற்றிய விபரங்களைக் கோருதல்

Y - அரசாங்கத் திரைப்படப் பிரிவிற்குச் சொந்தமான திரைப்படத்தின் பகுதியொன்றை (கிளிப்) செய்தி விடயமொன்றில் இணைத்துக் கொள்ளுதல்

மேற்படி சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய சட்டங்கள் பற்றிய சரியான தெரிவு,

(1) X - புலமைச் சொத்துச் சட்டம் Y - தகவலறியும் உரிமைச் சட்டம்
(2) X - தகவலறியும் உரிமைச் சட்டம் Y - புலமைச் சொத்துச் சட்டம்
(3) X - பொது அளிக்கைச் சட்டம் Y - தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்
(4) X - தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம். Y - பொது அளிக்கைச் சட்டம்
(5) X - தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம். Y - புலமைச் சொத்துச் சட்டம்

**50.** பின்வருவன பொதுமக்கள் தொடர்புடன் சம்பந்தப்பட்ட சில செயற்பாடுகளாகும்.

A - உள்ளக - வெளியகத் தரப்புகளுடன் உறவுகளைப் பேணுதல்

B - அரசியல் - உயர்நிலையினர் தொடர்புகளை முகாமித்தல்

C - நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (Corporate Social Ressponsibility) நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்

D - ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் உறவுகளைப் பேணுதல்

மேற்படி செயற்பாடுகளுடன் தொடர்புடைய பொதுமக்கள் தொடர்புச் சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டும் வரிசைக்கிரமத்தினைத் தெரிவுசெய்க.

(1) வியாபார, ஊடக, நிறுவன, அரச பொதுமக்கள் தொடர்பு
(2) நிறுவன, அரச, வியாபார, ஊடக பொதுமக்கள் தொடர்பு
(3) ஊடக, நிறுவன, அரச, வியாபார பொது மக்கள் தொர்பு
(4) அரச, வியாபார, ஊடக, நிறுவன பொதுமக்கள் தொடர்பு
(5) நிறுவன, அரச, ஊடக, வியாபார பொதுமக்கள் தொடர்பு

❊ ❊ ❊

3630

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

29 T II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

* **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **40** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** பாடசாலை பரிசளிப்பு விழாவை வெற்றிகரமானதொன்றாக மேற்கொள்ள ஊடகக் கழகத்தின் பங்களிப்பு முக்கியமானதென்பதை ஆசிரியர் வலியுறுத்தினார்.

(i) விழா தொடர்பான செயற்பாடுகளில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே இடம்பெறக்கூடுமான முறைசாராத் தொடர்பாடல் சந்தர்ப்பங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) நிகழ்வை ஒழுங்குபடுத்தும்போது ஆளிடைத் தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் **இரண்டு** அனுகூலங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) இந்த நிகழ்வானது ஒரு குழுத் தொடர்பாடல் சந்தர்ப்பமாகும். தமது பணியைச் சிறப்பாக நிறைவேற்ற நிகழ்ச்சி அறிவிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படக்கூடிய குழுத் தொடர்பாடல் முறைகள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) விழாவின் வேறுபட்ட விடயங்களுக்காக நாட்டார் கலை கருப்பொருளைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன்போது நாட்டார் கலைகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் விபரிக்குக. (16 புள்ளிகள்)

**2.** (i) மெய்நிகர்த் தொடர்பாடலின் **இரண்டு** விசேட தன்மைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) செவிப்புலத் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதற்குப் பங்களிக்கும் **இரண்டு** காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) "தொலைக்காட்சி ஒரு கவர்ச்சிகரமான ஊடகமாகும்." இக்கூற்றினை தொலைக்காட்சி ஊடகத்தின் அடிப்படை அம்சங்கள் **இரண்டின்** ஊடாக விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) கீழ்வரும் நான்கு அம்சங்களில் கவனத்தைச் செலுத்தி, 'பிரசித்த பண்பாடு' என்னும் தலைப்பில் செய்திப்பத்திரிகை ஒன்றுக்கான கட்டுரையொன்றை 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(அ) ஆழமற்ற உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளமை
(ஆ) அனைவராலும் அனுபவிக்கக் கூடுமானதாக இருத்தல்
(இ) பாரிய எண்ணிக்கையிலான உற்பத்தியைக் கொண்டுள்ளமை
(ஈ) வர்த்தக நோக்கங்களைக் கொண்டுள்ளமை (16 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**3.** வெவ்வேறு தொடர்பாடல் அடுக்குகளில் ஊர்வம்பு நிகழ்த்தப்படுவது காணக்கிடைக்கப்பெறுகின்றது.

(i) தொடர்பாடல் செயன்முறையின் எந்த அடிப்படைக்கூறு ஊர்வம்பை முன்னெடுப்பதாக அமைகிறது? (04 புள்ளிகள்)

(ii) ஊர்வம்பு முறைசார் தொடர்பாடலில் ஏன் உள்வாங்கப்படுவதில்லை என்பதற்கான காரணங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) "சில சமூக ஊடகத் தளங்கள் ஊர்வம்பின் அடிப்படையில் இயங்குகின்றன." சமூக ஊடகங்களின் பின்வரும் அம்சங்களை உதாரணங்களாகப் பயன்படுத்தி இக்கூற்றை விளக்குக.

(அ) உள்ளடக்கத்தை உருவாக்குதல்

(ஆ) பங்கேற்பு

(இ) உள்ளடக்கத்தைப் பரிமாறிக்கொள்ளுதல் (12 புள்ளிகள்)

(iv) ஊர்வம்பு பேசும் இணையத்தளங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய ஆய்வொன்றினை மேற்கொள்ள நீங்கள் எதிர்பார்த்து, தரவு சேகரிப்பிற்காக வினாக்கொத்து ஒன்றினைப் பயன்படுத்தத் திட்டமிடுகிறீர்கள். வினாக்கொத்தைத் தயாரிக்கும்போது அவசியம் கவனத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** பிரதான அம்சங்களை விபரிக்குக. (16 புள்ளிகள்)

**4.** (i) ஊடக விளங்கறிவு தொடர்பில் பல அம்சங்கள் காணப்படுகின்றன. ஊடக விளங்கறிவு பற்றி ஐரோப்பிய ஒன்றியம் வரைவிலக்கணப்படுத்தும் அடிப்படை அம்சங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) வெகுசன ஊடகங்களின் பணிகள் பல்வகைமையானவை. பின்வரும் பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணம் வீதம் பயன்படுத்தி, சுருக்கமாக விபரிக்குக.

(அ) பொருட்கோடல்

(ஆ) இணைப்பாக்கம் செய்தல் (08 புள்ளிகள்)

(iii) ஊடக விளங்கறிவு ஒரு பல்பரிமாண (multi-dimensional) எண்ணக்கருவாகும். ஊடகப் பயன்பாட்டில் பின்வரும் பரிமாணங்களின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

(அ) உணர்வுசார் பரிமாணம்

(ஆ) அழகியல் பரிமாணம்

(இ) ஒழுக்கம்சார் பரிமாணம் (12 புள்ளிகள்)

(iv) இலங்கையில் வெகுசன ஊடகங்களின் புதிய போக்குகள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன. அவை எவ்விதம் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(அ) புதிய முன்வைப்புப் பாணிகள் பயன்படுத்தப்படுதல்

(ஆ) பொழுதுபோக்கிற்கு அதிக கவனம் செலுத்தப்படுதல் (16 புள்ளிகள்)

**5.** பாடசாலை ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தை ஒழுங்கமைக்கும் குழுவில் ஒரு அங்கத்தவராக நீங்களும் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் எனக் கற்பனை செய்துகொள்க.

(i) மேற்படி விழாவிற்கு நிகழ்வு முகாமைத்துவம் ஏன் தேவைப்படுகின்றது என்பதற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) நீங்கள் ஊடக அதிகாரியாகச் செயற்படுகிறீர்கள் என்பதாக இருந்தால், விழாவிற்கு முன்னதாக நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பணிகள் **இரண்டினை** விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) உயர்நிலை ஊடக விளங்கறிவைக் கொண்டுள்ள மாணவர்களை உருவாக்குதல் விழாவின் நோக்கங்களில் ஒன்றாகும். ஜேம்ஸ் பொட்டர் கூறுவதின்படி, ஊடக விளங்கறிவை விருத்தி செய்வதால் கிடைக்கும் ஆதாயங்கள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) சமூகத்தில் பாடசாலை தொடர்பான நற்பிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படக்கூடுமான சமூக ஊடகங்களின் தாக்கங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)



Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

**6.** வெகுசன ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதன் அவசியம் பற்றி பொதுமக்கள் அபிப்பிராயத்தைப் அறிந்து கொள்ளும் ஆய்வொன்றுக்கான தரவு சேகரிப்பாளராக உங்களுக்கு வாய்ப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

(i) ஆய்வினைப் பயன்படுத்துவதன் ஆதாயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஊடக ஒழுங்குபடுத்தலின் அவசியத்தை **இரண்டு** அம்சங்களைப் பயன்படுத்தி விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) உலக அளவில் ஊடக ஒழுங்குபடுத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் பிரவேசங்கள் **மூன்றினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) "சமூக ஊடகச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய தேவையைக் கொண்டுள்ளன." இந்தக் கூற்றுக்குச் சார்பான **இரண்டு** அம்சங்களையும், எதிரான **இரண்டு** அம்சங்களையும் விபரிக்குக. (16 புள்ளிகள்)

**7.** நீங்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி எனக் கற்பனை செய்துகொள்க.

(i) பொதுமக்கள் தொடர்பு அதிகாரி தொழிலைக் கடந்த காலங்களில் அடையாளப்படுத்தப் பயன்பட்ட பதவிநிலைகள் **இரண்டினை** எழுதுக. (04 புள்ளிகள்)

(ii) நிறுவன ஊடக அதிகாரியின் பணிகள், பொதுமக்கள் தொடர்பு அதிகாரியின் பணிகளை ஒத்திருக்கும் சந்தர்ப்பங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) சமூகத்தினுள் வறுமையை இழிவளவாக்க அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) அபிவிருத்திக்குத் தொடர்பாடல் எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என்பதைக் கீழுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, உதாரணங்களுடன் விளக்குக.

(அ) தேவைகளை மையப்படுத்துதல்

(ஆ) ஆரோக்கியமான சூழலொன்றைக் கட்டியெழுப்புதல் (16 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

(11) WWW.PastPapers.WiKi (11)




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO


**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For
Easy Monthly Installments
KOKO
CASH ON DELIVERY
VISA